# புறநானூற்று போர் அறம்

முனைவர் கோ.லெனின்
உதவிப் பேராசிரியர்,
தத்துவம்,சமயம் மற்றும் பண்பாட்டுத் துறை, பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி),
மேலையூர்,சீர்காழி-வட்டம், மயிலாடுதுறை-மாவட்டம்-609 107.
Leninyoga14@gmail.com

25

**ஆய்வுச்சுருக்கம்**

உலகம் தோன்றிய காலம் தொட்டு மனிதன் இயற்கையோடும் விலங்குகளோடும் நோய்களோடும் போராடி வாழவேண்டிய சூழலில் இருந்துள்ளான். மேலும் தன்னையும் தன் இனத்தையும் காக்க வேண்டிய நிர்பந்தத்நில் இந்த போராட்டம் தொடர்ந்துள்ளது. போர் என்பது ஒரு நாட்டின் அழிவு, ஒரு இனத்தின் அழிவு, போரினால் பெற்றோர்கள் தங்களின் வாரிசுகளையும், குழந்தைகள் தங்களது பெற்றோர்களையும் இழப்பது உச்சகட்ட கொடுமை. மனிதநேயத்தை சீர்குலைக்கும் செயல்களில் போர் முக்கியப் பங்கு வகிக்கின்றது. அதனால் தான் இன்று உலகமெங்கும் உள்ள மக்கள் அமைதியை விரும்புகிறார்கள். ஆனால் இவையனைத்தும் தெரிந்தும்கூட கனரகப் பீரங்கிகள், இயந்திர துப்பாக்கிகள், நீர்மூழ்கிகள், வான் வழிப் போர் முறைகள் போன்றவைகளைக் கொண்டு இன்றும் போர்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் வளர்ச்சி அடையாத காலகட்டமான சங்க காலத்தில் நம் தமிழ் மன்னர்கள் போர்கள் பல புரிந்து பல நாடுகளையும் கைப்பற்றியுள்ளனர். சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்கள் மன்னர்களின் போர்த்திறத்தையும் போரில் வெற்றிப்பெற்றதையும் பாடியிருக்கிறார்கள். சில புலவர்கள் போரினால் ஏற்பட்ட கொடுமைகளை பாடியிருக்கின்றனர் இன்னும் சிலரோ, மன்னர்கள் பகையின்றி ஒற்றுமையுடன் வாழ பாடுபட்டிருக்கிறார்கள். இத்தகைய போர் பற்றியச் செய்திகளை மிகுதியாக விளக்கும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்று புறநானூறு. புறநானூற்றில் இடம்பெறும் போர் மரபு பற்றியச் செய்திகளை எடுத்தியம்புவதே இவ்வாய்வு கட்டுரை.

**திறவுச் சொற்கள்**

அறநெறி, அறப்போர், குற்றம், நட்பு, போர்முறை, வீரம்.

**முன்னுரை**

காதலையும் வீரத்தையும் சங்ககால மக்கள் தம் இரு கண்களாகக் கொண்டனர். எனவேதான் சங்க இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டன. காதலை அகநூல்களும் வீரத்தை புறநூல்களும் எடுத்தியம்பின. எனினும் அகநூல்களில் புறச்செய்திகளும் புறநூல்களில் அகச்செய்திகளும் இடம் பெறுவதைக் காணலாம். புறநானூறு என்றதுமே சங்ககால மக்கள் நடத்திய போர்களும் அவர்களது வீரச்செயல்களுமே நமது நினைவுக்கு வரும். ஆனால் போரினால் விளையும் துன்பங்களை எடுத்துக்கூறி போர்களை தடுப்பதற்குரிய வழிமுறைகளையும் கட்டாயமாகப் போர்

செய்யவேண்டிய சூழல்களில் பொது மக்களுக்குத் துன்பம் ஏற்படாதவாறு அவர்களைப் பாதுகாத்த சங்ககால மக்களின் நிர்வாக திறனையும் புறநானூறு பதிவாக்கியுள்ளது. சங்க கால மன்னர்களின் போர் முறை குறித்து புறநானூற்று பதிவுகளை இனி விரிவாக காணலாம்.

**சங்க காலப் போர்முறை**

சங்க காலத்தில் தமிழ் மன்னர்களின் போர் முறைகள் அறப்போர் முறை ஆகும். அதாவது, அவர்களின் போர்களில் வஞ்சகம், சூழ்ச்சி என்று எதுவும் இல்லாமல் நேர்மையானதாக இருந்துள்ளது. காலையில் சூரிய உதயத்தின் போது முரசறைந்து போர் தொடங்கி, மாலையில் சூரியன் அஸ்தமிக்கும் போது முரசறைந்து போர் நிறுத்தப்படும். முழு இரவு ஒய்வுக்கு பிறகு மறு நாள் மீண்டும் போர் தொடங்கும். இன்று போய் போர்க்கு நாளை வா என்று இராவணனை அனுப்பிய இராமனின் உள்ளத்தின் வழி கம்பர் தமிழரின் போர் பண்பாட்டினை நமக்கு படம் பிடித்து காட்டுகிறார். மேலும் போரில் தோல்விகண்டு ஓடும் பகைவனின் மேல் ஈட்டிகளையும், வேல்களையும் செலுத்தாத அறநெறி இருந்தது. போரில் காயமடைந்தவன் பகைவனே ஆனாலும் அவனிடம் இறக்கம் காட்டும் பண்பு இருந்தது.

**புறநானூறு சுட்டும் போர் அறம்**

குடுமி என்ற இயற்பெயரைக் கொண்ட பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன், தான் போருக்கு போகும் போது முதலில் போரில் பங்குகொள்ளாதவர்களை விலகச் செய்த பின்புதான் அறப்போர் செய்யத் துவங்குவான். நெட்டிமையார் எனும் புலவர், புறநானூற்றில் ஒன்பதாவது பாடலாக இந்த மன்னனைப் பற்றி பின் வருமாறு பாடியிருக்கிறார்

**"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்,**
**எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின் என**
**அறத்துஆறு நுவலும் பூட்கை, மறத்தின்**
**கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்**
**எங்கோ, வாழிய குடுமி! தங் கோச்**
**செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,**
**முந்நீர் விழவின், நெடியோன்**
**நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"** (புறநானூறு – 09)

அதாவது, பசுக்களும், பசுவை போன்ற குணமுடைய அந்தணர்களும், பெண்களும், நோயுற்றவர்களும், பிதிர்க்கடனாற்ற ஆண் குழந்தை இல்லாதவர்களும் கேளுங்கள், என்னுடைய அம்புகள் விரைவாக பாய உள்ளன. அதனால் பாதுகாப்பான இடத்துக்குப் போய் விடுங்கள் என்று அறிவுறுத்திப் போர் புரியும் அறநெறியாளனாம் எம்முடைய வேந்தனாகிய குடுமி என்று போரின் அறச் சிறப்பை புலவர் இப்பாடல் வாயிலாக நமக்கு உணர்த்துகிறார்.

**போரின் அழிவைக் குறிக்கும் பாடல்**

அறப்போர் குறித்து புகழ்ந்து பாடிய இதே புலவர் மன்னன் சிற்றூர்களின் மேல் பெரும்படை கொண்டு தாக்கியதனால் ஏற்பட்ட பேரழிவுகளைப் பார்த்து மனம் வருந்தி

**“கடுந்தேர் குழித்த ஞௌ;ளல் ஆங்கண்**
**வெள்வாய்க் கழுதைப் புல்லினப் பூட்டிப்**
**பாழ்செய் தனை, அவர் நனந்தலை நல்லெயில்**
**புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்**
**வேள்ளுளைக் கலிமான் கவிகுளம்;பு உகளத்**
**தேர்வழங் கினைநின் தெவ்வர் தேஎத்துத்**
**துளங்கு இயலாற் பணை எருத்தின்**
**பா வடியார் செறல் நோக்கின்**
**ஒளிறு மருப்பின் களிறு அவர**
**காப் புடைய கயம் படியினை…”** (புறநானூறு – 15)

என்று பாடியுள்ளார், அதாவது பகைவருடைய நல்ல கோட்டைகள் சூழ்ந்த அகன்ற தெருக்களை கழுதை ஏர் பூட்டி உழுது பாழ் செய்தாய். நெற்பயிர்கள் விளைந்துள்ள வயல்களில் தேர்களைச் செலுத்தி அழித்தாய். அவர்களின் காவல்; மிகுந்த நீர்த் துறைகளில் உனது யானைகளை நீராட்டி அழித்தாய் என்று அம்மன்னன் சிற்றூர்களில் போர் நிகழ்த்திய கொடுஞ்செயல்கள் குறித்து வருந்திக் கூறியுள்ள பாங்கு புலவரின் மனித நேயச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது.

**மன்னர்கள் பகையின்றி ஒற்றுமையுடன் வாழ பாடுபட்ட புலவர்கள்**

சோழ அரசர்களான நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே போர் மூண்டது. சோழர் குலத்தில் தோன்றிய நீங்கள் இருவரும் போரிட்டு, யார் தோற்றாலும் அது சோழ குலத்துக்கு தோல்வியே ஆகும் என்று கோவூர் கிழார் எடுத்துரைத்து பின் வருமாறு பாடியள்ளார்.

**“இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்**
**கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்**
**நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே நின்னொடு**
**பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே**
**ஒருவீர் தோற்பினும், தோற்ப நும் குடியே**
**இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனால்**
**குடிப்பொருள் அன்று நும் செய்தி, கொடித்தேர்**
**நும்மோர் அன்ன வேந்தர்க்கு**
**மெய்ம்மலி உவகை செய்யும், இவ் இகலே!** (புறநானூறு – 45)

இங்கு போர் செய்பவர்களில் யாரும் பனந்தோட்டால் ஆன மாலையை (சேரர்களுக்கான மாலை) யாரும் அணியவில்லை. கரிய வேப்பம்பூ மாலையை (பாண்டியர்களுக்கான மாலை) யாரும் அணியவில்லை. உன்னுடைய மாலை அத்திப்பூவால் தொடுக்கப்பட்டது. உன்னோடு போர்

புரிபவனின் மாலையும் அத்திப்பூவால் தொடுக்கப்பட்டது தான். உங்கள் இருவரில் ஒருவர் தோற்றாலும் தோற்பது சோழன் குடி தான். இப்போரில் நீங்கள் வெற்றி பெறுவது என்பது முடியாத காரியம். ஆதலால் உங்கள் செயல் உங்கள் குடிப்பெருமைக்குத்தான் இழுக்கு. இந்தப் போரைப்பார்த்து மற்றவர்கள் ஏளனமாகச் சிரிப்பார்கள் என்று இந்த பாடலின் மூலம் கோவூர்கிழார் அறிவுரை வழங்கினார். இதனைக் கேட்ட நெடுங்கிள்ளி, நலங்கிள்ளிக்கு விட்டுக்கொடுத்தான் என்று தெரியவருகிறது.

தகடூர் மன்னன் அதியமான்அஞ்சிமீது தொண்டைநாட்டு மன்னன் தொண்டைமான் இளந்திரையன் போர் புரிவதற்காக படைகளை பெருக்கும் வேளையில் ஈடுபட்டிருந்தான். ஒற்றர்கள் மூலம் தெரிந்துகொண்ட அதியமான், இந்த போரை நிறுத்துவதற்காக ஔவையாரை தூது அனுப்பினான். தன் படை பலத்தை ஔவையிடம் காட்டி, அதன் மூலம் அதியமானை எச்சரிக்க நினைத்து ஔவையிடம் தன் படை பலத்தை காட்டினான் தொண்டைமான். ஔவைக்கு அவனுடைய கர்வம் புரிந்தது. அவனுடைய கர்வத்தை அடக்குவதற்காக வஞ்சப்புகழ்ச்சியில் ஒரு பாடலைப் பாடினார்,

**“இவ்வே,பீலி அணிந்து, மாலை சூட்டிக்**
**கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து,**
**கடியுடை வியன்நக ரவ்வே: அவ்வே**
**பகைவர்க் குத்திக், கோடுநுதி சிதைந்து,**
**கொல்துறைக் குற்றில மாதோ; என்றும்**
**உண் டாயின் பதம் கொடுத்து,**
**இல் லாயின் உடன் உண்ணும்,**
**இல்லோர் ஒக்கல் தலைவன்,**
**அண்ணல்எம் கோமான், வைந் நுதி வேலே”** (புறநானூறு – 95)

அதாவது, இங்கே ஆயுதங்கள் எல்லாம் பூவாலும் மயில் இரகாலும் அலங்கரிக்கப்பட்டு நெய் தடவி புதிதாக இருக்கிறது. ஆனால் அதியமானின் படைக்கலத்தில் இது போன்று போர்க்கருவிகள் காட்சிப் படுத்தப்படவில்லை. அவன் ஆயுதங்களில் எல்லாம் பகைவர்களின் இரத்தம் தோய்ந்து, அவர்களின் உடம்பிலிருந்த சதைகள் எல்லாம் ஒட்டியவாறு கூர் மங்கி போய் கொல்லனிடத்தில் சரிசெய்ய கொடுக்கப் பட்டுள்ளன.

இப்படி அதியமானின் படைபலத்தையும் போர்களில் அவன் செய்த வீரதீர செயல்களையும் வஞ்சப் புகழ்ச்சியின் மூலமாக தொண்டைமானுக்குத் தெரிவித்தார் ஔவையார். இந்த வஞ்சப்புகழ்ச்சியைத் தெரிந்து கொண்ட தொண்டைமான், அதியமானுடன் போரிடும் எண்ணத்தை விட்டுவிட்டு, நட்பு பாராட்டினான். சங்க கால பெண்பால் புலவரான ஔவையார் இரு மன்னர்களுக்கு இடையே நடைபெறவிருந்த போரினை தடுத்து நிறுத்தி மனித நேயத்தை நிலைநாட்டியிருப்பது தக்க சான்றாக அமைகிறது.

சில மன்னர்கள் தன் வலியறியாது பிற மன்னர்கள் மேல் போர் தொடுக்க

முயன்றுள்ளனர்.தன்னைவிட வலிமை குறைந்தவர் மேல் படையெடுத்தாலும் தன்னைவிட வலிமை மிகுந்தவர் மேல் படையெடுத்தாலும் இறுதியில் இழுக்கே நேரும் என்பதை புலவர்கள் அவர்களிடம் தயங்காமல் எடுத்துரைத்துள்ளனர்.தன்னொத்த வேந்தரோடு பொருந்தி வாழாமல் தன்னை வியந்து பிற மன்னர்களைப் பகைத்து அவர்களை எளிதில் வென்றுவிடலாம் என மண்ணாசை கொண்டு போரிட முயன்ற நன்மாறன் என்னும் மன்னனைக் கண்டு காரிக்கண்ணனார் உண்மையை உணர்த்திப் போரை நிறுத்துகிறார்.

**“வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்**
**புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன**
**கடிமரம் தடிதல் ஓம்பு நின்**
**நெடுநல் யானைக்குக் கந்து ஆற்றாவே”** (புறநானூறு -57)

கல்வியில் வல்லவராக இருப்பவரும் இல்லாதவரும் மன்னர்களிடம் பரிசு பெறுவதற்காக அவனைப் பாராட்டிப் புகழ்வர். இப்புகழ் மொழிகளில் உண்மையும் இருக்கும் மிகையும் இருக்கும் இவற்றில் எது உண்மை எது மிகை என்பதை மன்னன் உணர்ந்து செயல்பட வேண்டும். இல்லையெனில் பழியே மிஞ்சும் என்கிறார்.

சில புலவர்கள் பொருளுக்காக நன்மாறனை மிகவும் வியந்து பாராட்டியதால் செருக்குற்ற நன்மாறன் பக்கத்து நாட்டு மன்னனோடு போரிட முயன்றான் ஆனால் அம்மன்னனோ நன்மாறனைப் போல் படைபலமில்லாதவன். எளிதில் வெல்லக்கூடியவன். இத்தகையவன் மீது போர்த் தொடுப்பதால் அவனை எளிதாக வென்றுவிட முடியும் என நன்மாறன் நினைத்தே போரிட முயற்சிக்கிறான். ஆனால் தனக்கு இணையான வலிமையற்ற அவனை வெல்வது ஒரு வீரமா? இது நன்மாறனுக்கு அழகா? இதுவெல்லாம் ஒரு பெருமையா? ஏனப் புலவர் காரிக்கண்ணனார் அவன் முகத்திற்கு நேராகவே சென்று கேட்கிறார்.

இப்போரினால் விளைவது என்ன? வலிமையற்ற ஒரு நாட்டின் மீதும் மக்களின் மீதும் போர்த் தொடுக்க விரும்பினால் பகை நாட்டுக் கழனிகளைக் கவர்ந்து கொள்ளலாம், பொருட்களைச் சூரையாடலாம், எதிரியின் ஊர்களை எரித்து விடலாம். ஏதிரிகளாக நினைப்பவர்களை அழித்து விடலாம். ஆவ்வூரின் பெருமை மிகுந்த காவல் மரங்களை யானை கட்டும் கட்டுத் தறிகளாகவும் மாற்றி விடலாம். இவையெல்லாமே நடத்திவிடக் கூடியவைதான். ஆனால் நன்மாறனின் பகைவன் நாட்டில் உள்ள மரங்களோ யானைகளைத் தாங்கும் வலிமை கூட இல்லாதவை, அத்தகைய காவல் மரங்களில் கட்டுவது நன்மாறனின் யானைக்குப் பெருமையைத் தருவது அல்லவே. எனவே யானைக்கு இழுக்கைத் தரும் அச்செயலைச் செய்யாதே என அறிவுரை கூறுகிறார். இப்போர் யானைக்கே இழுக்கு என்றால் அம்மன்னனுக்கு மட்டும் பெருமை தந்து விடுமா என்ன? இதன் மூலம் உள்ளதை உள்ளவாரே உரைத்து இப்போரினால் நன்மாறனுக்கு புகழோ, பெருமையோ கிடைக்கப் போவதில்லை என்பதால் போரே தேவையற்றது என்று உணர்த்துகிறார்.

நன்மாறனும் படையெடுப்பை நிறுத்தி விடுகிறான். நாட்டில் அமைதி நிலவுகிறது. அழிவுகள் தவிர்க்கப்படுகின்றன. மனிதம் காக்கப்படுகிறது. ஒரு அறிவுரையைக் கேட்டதால் மன்னன்

நன்மாறனும் வரலாற்றில் நிலைத்த புகழ் பெற்று இன்று வரை பாராட்டை பெற்று வருகிறான். அதுமட்டுமின்றி அதுவரை மாறன் என்ற பெயரில் அறியப்பட்டு வந்த அவன் புலவர்களால் நன்மாறன் என அழைக்கப்படலானான்.

**முடிவுரை**

புறநானூறு என்ற மாபெரும் இலக்கியம் தமிழர்களின் அறநெறி சிந்தனைகளை பறைசாற்றுகின்றது. அரசர்கள், புலவர்கள், மக்கள் எனும் இந்த மூன்று பாலத்தையும் முறையே இணைக்கின்றது. புலவர்கள் மன்னர்களை புகழ்ந்து பாடி பரிசில் பெற்றனர் என்பது மட்டுமின்றி மக்கள் நலனிலும் அக்கறை கொண்டவர்களாக திகழ்ந்துள்ளனர். போரினால் ஏற்படும் அழிவை உணர்த்தியும், சகோதரர்களிடையே ஏற்படும் பகைமை உணர்வை நீக்கி சமரசம் செய்தமையும், மன்னர்களிடையே நடைபெறவிருந்த போரினை தடுத்து நிறுத்தி நட்புணர்வுடன் பழக வழிவகுத்தமையும் புறநானூற்று புலவர்களின் போர் அறத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இன்று உலகமெங்கும் போர்நெறிகள் பின்னற்றப் படுவதில்லை சனநாயக அடிப்படையிலான போர் முறைகள் பின்பற்றப்படல் வேண்டும். தன் துன்பம் பார்க்கும் போது பிறர் துன்பத்தையும் தன் துன்பம் போல்கருதி எதிர் நாட்டு மக்களையும் எதிர் நாட்டு மன்னர்களையும் நடத்திய முறை வவேற்கத்தக்கது அது போன்ற நடைமுறைகளை இன்றளவில் பின்பற்றினால் நன்று.

**துணைநூற் பட்டியல்**

1. க.ப. அறவாணன் - தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், தமிழ்க் கோட்டம் பதிப்பகம், சென்னை.1994.
2. மு.சண்முகம் பிள்ளை – சங்கத்தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004
3. உ.வே. சாமிநாத ஐயர்(ப.ஆ) - புறநானூறு, தமிழ்ப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்,1988.
4. கு.வெ. பாலசுப்பிரமணியன் - சங்க மரபு – தமிழாக்கம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. 2009.